13 Jaffna International Trade Fair
யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகச் சந்தை
JITF 2023
MARCH மார்ச் 3 4 5
9.00மு.ப - 7.00பி.ப
Muttraweli Grounds
இன்று இரண்டாம் நாள்
ORGANIZED BY LECS LANKA EXHIBITION

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூ. 50

சுடர் : 38
கதிர் : 98

சனிக்கிழமை 04 மார்ச் 2023 | மாசி 20 ஆம் நாள் - வள்ளுவர் ஆண்டு 2054 | பக்கங்கள் 12

# தேர்தலுக்கு நிதியை உடன் விடுவிக்குக!

## உயர்நீதிமன்றம் நேற்று அதிரடி

கொழும்பு, மார்ச் 4

வரவு - செலவுத் திட்டத்தில் தேர்தலுக்காக ஒதுக்கப்பட்ட நிதியைத் தடுத்துவைக்க முடியாது என்று திறைசேரியின் செயலாளருக்கு உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. »11

## ஜோர்ஜிவா - ரணில் நேற்றுமுன்தினம் பேச்சு

கொழும்பு, மார்ச் 4

சர்வதேச நாணய நிதியத்தின் பிரதானி கிரிஸ்டலினா ஜோர்ஜிவாவுக்கும் ஜனாதிபதிக்கும் இடையே நேற்றுமுன்தினம் தீர்மானமிக்க கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது.

இலங்கை எதிர்பார்க்கும் சர்வதேச நாணய நிதியத்தின் நிதி உதவிகள் மற்றும் கடன் மறுசீரமைப்புத் தொடர்பில் இங்கு விரிவாகக் கலந் »11

## போராட்டங்கள் மூலம் ஆட்சிமாற்றம் இல்லை

### தமிழர் தலைநகரில் வைத்து ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

திருகோணமலை, மார்ச் 4

அரசமைப்பை வெறும் காகித ஏடுகளாக்க இடமளிக்கமுடியாது. வீதிகளில் இறங்கிப் போராட்டங்களை நடத்தி ஆட்சிமாற்ற »11



## உள்ளூராட்சித் தேர்தல் திகதி மார்ச் 7 இலேயே முடிவாகும்?

கொழும்பு, மார்ச் 4

உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவது தொடர்பில் ஆராய்வதற்காக தேசிய தேர்தல் ஆணைக்குழு மார்ச் மாதம் 7 ஆம் திகதி கூடவுள்ளது. இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ள »11



## கச்சதீவில் இன்று பெருந்திருவிழா!

யாழ்ப்பாணம், மார்ச் 4

கச்சதீவு புனித அந்தோனியார் திருத்தலப் பெருவிழா பல்லாயிரம் பக்தர்கள் புடைசூழ »10

## கோத்தாபய கொலைமுயற்சி வழக்கு: கைதியின் குற்ற ஒப்புதல் நிராகரிப்பு

கொழும்பு, மார்ச் 4

கோத்தாபய கொலைமுயற்சி வழக்கில், அரசியல் கைதியான சிவலிங்கம் ஆரூரனின் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் நிராகரிக்கப்பட்டுள்ளது.

சந்தேகநபர் பொலிஸாரால் சித்திரவதை செய்யப்பட்டுள்ளார் என்பது நிரூபிக்கப்பட்டதை அடுத்தே அவரிடம் பெறப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்குமூலம் »11

## கச்சதீவில் இம்முறை பிக்குகள் நடமாட்டம்!



யாழ்., மார்ச் 4

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயப் பெருவிழா நேற்று »11

ஆளுநரின் தாமதத்தால்

## இந்தியத் துணைத்தூதுவர் ஆரம்ப நிகழ்வில் 'அவுட்'!

யாழ்ப்பாணம், மார்ச் 4

யாழ்ப்பாணத்தில் நேற்று ஆரம்பமான சர்வதேச வர்த்தகக் கண்காட்சியில் ஆளுநர் வருகை »11

## மகனின் மரணச்செய்தி: அதிர்ச்சியில் தாய் சாவு!

### கிளிநொச்சியில் சோகம்

கிளிநொச்சி, மார்ச் 4

மகனின் மரணச் செய்திகேட்டு அதிர்ச்சியில் தாய் உயிரிழந்த சம்பவம் சோகத்தை »10

## அத்துமீறும் படகுகளை உடன் திருப்பியனுப்புக

### இந்திய மீனவர்கள் வலியுறுத்து

விரிவு:- பக். 11

## வர்த்தகக் கண்காட்சி நேற்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், மார்ச் 4

யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகக் கண்காட்சி யாழ்ப்பாணம் முற்றவெளியில் வட »10



## கச்சதீவில் தீ விபத்து

யாழ்., மார்ச் 4

கச்சதீவில் நேற்றுத் திடீரென தீவிபத்து ஏற்பட்டது. இதையடுத்து விரைந்து செயற்பட்ட »10

## தொப்புள்கொடி உறவென்றால் வயிற்றில் ஏன் அடிக்கிறீர்கள்?

### இந்திய மீனவர்களிடம் இலங்கை மீனவர்கள் ஆதங்கம்

யாழ்ப்பாணம், மார்ச் 4

ஈழத்தமிழர்கள் எமது தொப்புள்கொடி உறவுகள் என்று சொல்லிச்சொல்லியே எங்கள் வயிற்றில் ஏன் அடிக்கின்றீர்கள்? என்று தமிழக மீனவர்களிடம் நேரில் கேள்வி எழுப்பியுள்ளனர் வடமாகாண மீனவர்கள். »10

## கஞ்சாவுடன் ஒருவர் கைது

யாழ்., மார்ச் 4

அச்சுவேலி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் கஞ்சாவை உடைமையில் »10

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல்வாதிகளின் பைகளை நிரப்புகின்றது அரசாங்கம்!

## சாடுகிறது பல்கலை. விரிவுரையாளர் சங்கம்

கொழும்பு, மார்ச் 4

புதிய வருமான வரி மூலம் தொழில் வல்லுநர்களின் கழுத்தை நெரித்து ஆட்சியாளர்களின் சட்டைப்பையை நிரப்பும் செயற்பாட்டை அரசாங்கம் மேற்கொள்கின்றது என்று மொரட்டுவ பல்கலைக்கழக விரிவுரையாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

பல்கலைக்கழக விரிவுரையாளர் சங்கம் விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் உள்ளதாவது:-

அரசாங்கத்தின் வருமானத்தை அதிகரிக்கவேண்டுமாயின், பொறுப்புள்ள அரசாங்கம் என்ற ரீதியில் வேறு வழிகளில் வரி வசூலிப்பது தொடர்பில் கவனம் செலுத்தவேண்டும்.

ஏற்றுமதி, இறக்குமதி வர்த்தகம் போன்ற துறைகளின் ஊடாக அறவிடக்கூடிய பெரியளவிலான வரியை அரசாங்கம் வேண்டுமென்றே மறந்துவிட்டது. அரசியல்வாதிகள் தங்களின் வருமானத்தின் மூலம் செலுத்தவேண்டிய வரியை தந்திரோபாயமாக நீக்கியுள்ளனர்.

அறவிடப்படும் வரி மூலமாக எவ்வித நன்மையும் கிடைக்காத நிலையில், மருந்துப் பற்றாக்குறை, மின் கட்டண அதிகரிப்பு, வட்டி வீதம் அதிகரிப்பு போன்றவற்றின் ஊடாக மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

உழைக்கும்போது அறவிடப்படுகின்ற வரியை அரசியல்வாதிகள் மற்றும் அவர்களுக்கு நெருக்கமானவர்கள் தமது தனிப்பட்ட நன்மைகளுக்காகப் பயன்படுத்தி வீண் விரயம் செய்யக்கூடாது. அதைச் சுகாதாரம் மற்றும் கல்வி போன்ற அத்தியாவசிய துறைகளுக்காக பயன்படுத்தவேண்டும்.

இந்த விடயங்களை நிறைவேற்றுவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்வதற்கு மொரட்டுவ பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சங்கம் அர்ப்பணிப்புடன் செயற்படும் - என்றுள்ளது. (எ-இ)



# கிளிநொச்சிச் சாலையினர் நேற்றுப் பணிப்பகிஷ்கரிப்பு

கிளிநொச்சி, மார்ச் 4

முல்லைத்தீவு சாலை பேருந்து மற்றும் கிளிநொச்சி தனியார் பேருந்து சேவைகள் வார நாள்களில் காலை 6.30 மணிக்கு சேவையில் ஈடுபடுவதற்கு அனுமதி வழங்கப்பட்டமையைக் கண்டித்து கிளிநொச்சி பேருந்துச் சாலையினர் நேற்று வெள்ளிக்கிழமை பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

நேற்றுக்காலை முதல் நண்பகல் வரை அனைத்துச் சேவைகளையும் சாலையில் முடக்கி பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

கிளிநொச்சி சாலை பேருந்துசேவை இடம்பெறும் நேரத்தில் விசுவமடுவிலிருந்து திருகோணமலை நோக்கிய மற்றுமொரு சேவையும் முல்லைத்தீவு சாலையினரால் மேற்கொள்ளப்படுகின்றது. இதனால் தமது சாலையின் சேவையில் பாதிப்பு ஏற்படுகின்றது எனத் தெரிவித்தே போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

அதையடுத்து முல்லைத்தீவு அரச பேருந்து சாலையால் முன்னெடுக்கப்பட்ட சேவையை இடைநிறுத்துவதாக இலங்கை அரச பேருந்து சேவையின் வட பிராந்திய முகாமையாளர் விஜித தர்மசேன வாக்குறுதி அளித்த நிலையில் போராட்டம் கைவிடப்பட்டது. (எ-14,113)

# நெற்செய்கையாளருக்கு இலவச டீசல் விநியோகம்

யாழ்ப்பாணம், மார்ச் 4

காலபோக நெற்செய்கை அறுவடைக்காக இலவசமாக டீசல் வழங்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

யாழ். குடாநாட்டில் 15 வரையிலான எரிபொருள் விற்பனை நிலையங்கள் ஊடாக இந்த இலவச டீசல் விநியோகிக்கப்பட்டு வருகின்றன என கமநலசேவைகள் திணைக்களம் தெரிவித்தது.

அரை ஏக்கர் தொடக்கம் இரண்டரை ஏக்கர் வரையிலான வயல் நிலங்களில் நெல் பயிரிட்டோருக்கு ஏக்கருக்கு ஆறரை லீற்றர் படி விநியோகிக்கப்படுகிறது.

விவசாயிகளுக்கென சீன அரசாங்கத்தால் இலங்கைக்கு நன்கொடையாக வழங்கப்பட்ட எரிபொருளே அரசாங்கத்தால் தற்போது விவசாயிகளுக்கு பகிர்ந்தளிக்கப்படுகின்றது. (ச-17)

## *கடலட்டை வளர்ப்பால்*

# கடலுணவுகள் விலை சடுதியாக அதிகரிப்பு!

யாழ்ப்பாணம், மார்ச் 4

வடக்கில் பாரம்பரியமாக கடற்றொழிலில் ஈடுபடும் மீனவ மக்களைப் பாதிக்கும் வகையில் கடலட்டை வளர்ப்பு மேற்கொள்ளப்படுவதால் கடலுணவுகளின் விலை அதிகரித்துள்ளதுடன் அவற்றுக்குப் பற்றாக்குறையும் நிலவுகிறது எனத் தெரிவிக்கப்படுகிறது.

அண்மைக்காலமாக அதிகளவான கடலட்டைப் பண்ணைகள் யாழ்.குடாநாட்டுப் பகுதிகளில் உருவாக்கப்பட்டு வருகின்றன. பண்ணை, குருநகர் மற்றும் தீவுப் பகுதி கடற்பகுதிகளில் கூடுதலான கடற்றொழிலாளர்கள் கடல் அட்டை வளர்ப்பில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த அட்டை வளர்ப்பால் மீன்பிடித் தொழில் அதிகளவில் பாதிக்கப்படுகிறது. இதனால் சந்தைகளில் கடலுணவுகளின் விலையும் அதிகரித்துள்ளது என வியாபாரிகள் தெரிவித்துள்ளனர். (ச-17)

# வரி திருத்தத்துக்கு ஐ.எம்.எப். உதவும்

கொழும்பு, மார்ச் 4

இலங்கையின் புதிய வரி சீர் திருத்தங்கள், வரி வருவாய் மற்றும் செலவினங்களின் ஏற்றத்தாழ்வை சரிசெய்யும் நோக்கத்தைப் பூர்த்தி செய்ய உதவி வழங்கப்படும் என்று இலங்கைக்கான சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

தனிநபர் வருமான வரிக்கான புதிய வரி விதித அட்டவணை இந்த நோக்கத்தைப் பூர்த்தி செய்ய உதவுகிறது என்றும் இந்தப் புதிய சீர்திருத்தங்கள் கடனாளிகளின் நம்பிக்கையை மீண்டும் பெற உதவும் என்றும் சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

இதேவேளை ஊதியத்தில் கழிக்கப்படும் வரி போன்ற திட்டங்களை எதிர்த்து அரச, தனியார் தொழிற்சங்கங்கள் இணைந்து கடந்த முதலாம் திகதி போராட்டங்களை முன்னெடுத்தன. (எ-14,இ)

# மருந்துத் தட்டுப்பாட்டை நீக்க சுகாதார ஸ்தாபனம் இணக்கம்



கொழும்பு, மார்ச் 4

இலங்கையில் தட்டுப்பாடாகவுள்ள 37 வகையான மருந்துகளை விரைவில் பெற்றுக் கொடுக்க உலக சுகாதார ஸ்தாபனம் இணக்கம் தெரிவித்துள்ளது.

உலக சுகாதார ஸ்தாபனத்தின் பணிப்பாளர் நாயகத்துடனான கலந்துரையாடலின்போது இந்த இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது என்று சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

உலக சுகாதார ஸ்தாபனத்தின் வருடாந்த மாநாட்டை முன்னிட்டு ஜெனிவாவில் கலந்துரையாடல் இடம்பெற்றது. இலங்கையின் தற்போதைய சுகாதார நிலைமை தொடர்பில் உலக சுகாதார ஸ்தாபனத்தின் தலைவரிடம் தெளிவுபடுத்தப்பட்டது - என்றார். (எ-இ)

# மாக்சிச லெனினிசக் கட்சி நேற்று யாழில் ஆர்ப்பாட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 4

புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியினர் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையம் முன்பாக நேற்று வெள்ளிக்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ரணில் சர்வாதிகார ஆட்சியே மக்களை வதைக்காதே என்னும் தலைப்பில் "மின் கட்டண உயர்வை உடன் நிறுத்து, பொருள்களின் விலையைக் குறை, உள்ளூராட்சி தேர்தலை உடன் நடத்து, வடபகுதி கடல் வளத்தை இந்தியாவுக்கு விற்காதே, உழைக்கும் மக்களை சுரண்டாதே" என பல்வேறு கோஷங்களை எழுப்பியவாறு அவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (எ-14)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# சர்வாதிகாரம் ஆபத்து

வீதிப் போராட்டங்களால் ஆட்சி மாற்றம் என்பது இனிமேல் சாத்தியமில்லை என்று கூறியிருக்கின்றார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. திருகோணமலை கடற்படைத்தளத்தில் நேற்று நடந்த நிகழ்வொன்றில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறியிருக்கின்றார். அரசாங்கத்துக்கு எதிரான போராட்டங்கள் மீண்டும் வீரியம் கொள்ள ஆரம்பித்திருக்கும் நிலையில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இந்தக் கூற்றை ஓர் எச்சரிக்கை என்றும் எடுத்துக் கொள்ளமுடியும்.

நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்து வாழ்க்கைச் செலவைச் சமாளிக்கமுடியாமல் சில மாதங்களுக்கு முன்னர் அரசாங்கத்துக்கு எதிராக மக்கள் வீதியில் இறங்கினார்கள். மக்களின் போராட்டம் காரணமாக ராஜபக்சக்களின் அரசாங்கம் வீழ்ச்சியுற, கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி பதவிக் கதிரையில் ஏறினார் ரணில் விக்கிரமசிங்க. நாட்டின் மீட்பர் என்ற போர்வைக்குள் ஒளிந்து கொண்டிருக்கும் ரணில் விக்கிரமசிங்க, தான் பதவியேற்றது முதல் மக்களின் போராட்டங்களை இரும்புக்கரம் கொண்டே அடக்கி வருகின்றார். மக்களின் போராட்டம் வீரியம் கொண்டால் அது தனது பதவிக்கு ஆபத்தாக மாறும் என்பதை நன்குணர்ந்த ரணில் விக்கிரமசிங்க அவ்வாறான ஜனநாயகப் போராட்டங்களை முளையிலேயே கிள்ளி எறிந்துவிட முனைகின்றார். அண்மைய நாள்களில் நாட்டின் தலைநகரில் நடந்த போராட்டங்கள் அடக்கி ஒடுக்கப்பட்ட விதம் அதற்குச் சாட்சியாகின்றது.

புதிய வருமான வரிக் கொள்கை, மின்சாரக் கட்டண உயர்வு என்று மக்கள் மீது பெரும் சுமைகள் சுமத்தப்பட்டிருக்கும் நிலையில், நாட்டின் வங்குரோத்து நிலைக்குப் பிரதான காரணகர்த்தாக்களான ராஜபக்சக்கள் இப்போதும் சுகபோகத்திலேயே திளைக்கின்றனர். அப்பாவிப் பொதுமக்கள் மீது, தன் கடும் முகத்தைக் காண்பிக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, உண்மையில் பொருளாதாரக் குற்றவாளிகள் மீது அந்த முகத்தைக் காட்டுவதே நியாயம். ஆனால், ரணில் விக்கிரமசிங்கவோ அதற்கு மாறாக தற்போதும் ராஜபக்சக்களைக் காப்பாற்றும் கைங்கரியத்தையே தன் முதற்பணியாகச் செய்து கொண்டிருக்கின்றார்.

போராட்டங்களால் நாட்டின் பொருளாதார மீளெழுச்சி தள்ளிப்போகும் என்ற அரசாங்கத்தரப்பு வாதம் சரியே என்றபோதும், மக்களின் குரலைச் செவிமடுக்கவேண்டிய பொறுப்பும் அரசாங்கத்துக்கு இருக்கின்றது. நாட்டின் பொருளாதார வீழ்ச்சிக்கு தற்போது ஆட்சியில் உள்ளவர்களும், அரசாங்கத்தில் ஒட்டிக்கொண்டிருப்பவர்களுமே முதன்மைக் காரணம் என்பது பரகசியமான நிலையில், அப்பாவி மக்களின் தலையில் நெருக்கடியின் முழுப்பாரத்தையும் சுமத்துவது எந்தவிதத்திலும் ஏற்றுக்கொள்ளமுடியாதது.ரணில்விக்கிரமசிங்கவின் இந்த அடக்குமுறைப்போக்குக்கு உள்நாட்டிலும், சர்வதேச ரீதியிலும் பலத்த கண்டனங்கள் எழுந்துள்ளபோதும், அவர் தொடர்ந்தும் சர்வாதிகாரப் போக்கிலேயே செயற்படுகின்றார். அதனையே அவர் திருகோணமலையில் விமானப்படையினர் முன்பாகக் கூறிய கருத்தும் கட்டியம் கூறுகின்றது. ஒருபோதும் சர்வாதிகாரம் நாட்டுக்கு விடிவைத் தராது. அத்தோடு சர்வாதிகாரிகளின் முடிவும் நல்ல படியாக அமைந்ததில்லை, ரணில் இதனைக் கொஞ்சம் உணர்தல் நலம்.

## நாளொரு நல்வார்த்தை

"யாரையும் பழிக்காமலும், எதையும் சபிக்காமலும் வாழுங்கள். அப்போதுதான் நீங்கள் மனிதராக வாழ முடியும்" – விவேகானந்தர்



# பசியால் வாடும் குழந்தைகளின் தொகை இலங்கையில் உயர்வு!

கொழும்பு, மார்ச் 4

இலங்கையில் அரைவாசிக்கும் அதிகமான குடும்பங்கள் தங்கள் குழந்தைகளுக்கு உணவளிக்கும் அளவைக் குறைத்துள்ளன. நாட்டின் பொருளாதார மந்த நிலையால் இந்தப் பட்டினி நெருக்கடி பாதிவாகியுள்ளது என சிறுவர் பாதுகாப்பு அமைப்பு தெரிவித்துள்ளது.

அந்த அமைப்பின் இலங்கைக்கான பணிப்பாளர் ஜூலியன் செல்லப்பா தெரிவித்துள்ளதாவது:

இலங்கையில் அதிகரித்துவரும் பணவீக்கம் மற்றும் உணவு, மருந்து மற்றும் வேலையின்மை போன்ற பிரச்சினைகள் குடும்பங்களில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன.

பணவீக்கம் காரணமாக கடந்த ஆண்டு ஜூன் மற்றும் டிசெம்பர் மாதங்களுக்கிடையில் சராசரி குடும்பச் செலவு 18 வீதமாக அதிகரித்துள்ளது. இதனால் பெரும்பாலான குடும்பங்கள் அடிப்படைத் தேவைகளைக் கூட பூர்த்திசெய்ய முடியாத நிலை காணப்பட்டது.

இந்தநிலையில் அதிகமான குடும்பங்கள் உயிர்வாழ்வதற்கு மாற்று வழிகளை நாட வேண்டிய கட்டாயத்தில் தள்ளப்பட்டனர். நாட்டின் பாதியளவான குடும்பங்கள் தங்கள் குழந்தைகளின் உணவு உட்கொள்ளும் அளவைக் குறைத்துள்ளதுடன் 27 வீதமானவர்கள் குழந்தைகளுக்கு உணவளிப்பதற்காக தமது உணவைத் தவிர்த்துள்ளனர்.

இந்த உறுதியற்ற தன்மை, குழந்தைகளுக்கான அடுத்தவேளை உணவுகளை எங்கிருந்து பெற்றுக்கொள்வது என்று தெரியாது ஓர் ஆபத்தான நிலைக்கு இட்டுச் செல்கிறது.

இதனைத் தடுப்பதற்கும் குழந்தைகளின் எதிர்காலத்தை காப்பாற்றுவதற்கும் அரசாங்கமும் சர்வதேச சமூகமும் தற்போதிருந்தே செயற்படவேண்டும் - என்றார். (ச-இ)

# டொலர் இன்றிய பரிவர்த்தனை மேற்கொண்டது இந்திய வங்கி

கொழும்பு, மார்ச் 4

இலங்கை ரூபாவில் ஏற்றுமதிக்கான பணத்தைச் செலுத்தி இலங்கையுடனான தமது முதல் டொலர் அல்லாத பரிவர்த்தனையை பாரத ஸ்டேட் வங்கி நேற்று வெள்ளிக்கிழமை மேற்கொண்டது என அந்த வங்கி தகவல் வெளியிட்டுள்ளது.

அமெரிக்க டொலர் பற்றாக்குறையாக உள்ள நாடுகளை வர்த்தகப் பொறிமுறைக்குள் கொண்டு வர இந்தியா எதிர்பார்த்துள்ள நிலையில் இந்த பரிவர்த்தனை நேற்று இடம்பெற்றுள்ளது.

சுதந்திரத்துக்குப் பின்னர், டொலர் பற்றாக்குறையால் மோசமான பொருளாதார நெருக்கடியை இலங்கை எதிர்கொண்டுள்ள நிலையில் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. (எ-14,இ)

நாளை

05.03.2023

ஞாயிற்றுக்கிழமை

மாசி 21

சுபநேரம் : 09.26 - 10.56

ராகுகாலம் : 04.56 – 06.26

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழில் 13 ஆவது சர்வதேச வர்த்தக கண்காட்சி

கமராவில் சிக்கியவை














































Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## தலைமன்னாரிலிருந்து கச்சதீவுப் பயணம் கடற்படையால் தாமதம்

மன்னார், மார்ச் 4
தலைமன்னார் கடற்பரப்பிலிருந்து கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயப் பெருவிழாவுக்கு நேற்று பக்தர்கள் செல்வதற்கு உரிய நேரத்துக்கு கடற்படை அனுமதிக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.
தலைமன்னார் கடற்கரையில் குழந்தைகள், வயோதிபர்கள் உட்பட பலரும் நீண்டநேரமாக காலை முதல் காத்திருந்தனர்.
கடற்படையினரின் அனுமதியை பெற்றுக் கொள்வதற்காக உரிய ஆவணங்கள் காலையிலேயே சமர்ப்பிக்கப்பட்டபோதும் படகு மூலம் செல்வதற்கான அனுமதியை கடற்படையினர் வழங்குவதில் தாமதம் ஏற்பட்டது.
இதனால் நீண்டநேரம் வெயிலில் காத்திருந்து அசௌகரியங்களுக்கு முகம்கொடுக்க நேரிட்டது என பக்தர்களால் தெரிவிக்கப்படுகிறது. (ச)

# கச்சதீவுத் திருவிழாவுக்கு படையெடுத்த பக்தர்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 4
வரலாற்றுப் பிரசித்திபெற்ற கச்சதீவு அந்தோனியார் ஆலயப் பெருந்திருவிழா நேற்று ஆரம்பமாகியது. அதிகளவான பக்தர்கள் நேற்றுக் காலை 6 மணி முதல் குறிகாட்டுவான் துறைமுகத்திலிருந்து செல்வதை அவதானிக்க முடிந்தது.



யாழ்ப்பாண மாவட்டச் செயலாளரது ஒருங்கிணைப்பில் யாழ்ப்பாண ஆயர் இல்லம், இலங்கைக் கடற்படை, நெடுந்தீவு பிரதேச செயலகம் உள்ளிட்ட சம்பந்தப்பட்ட சகல திணைக்களங்களின் முழுமையான ஒத்துழைப்புடன் பெருவிழா ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
பெருவிழாவுக்கான போக்குவரத்துக்கென 30 படகுகளுக்கு அனுமதி வழங்கியிருந்த நிலையில் நேற்றைய தினம் 20 படகுகள் சேவையில் ஈடுபட்டன. (ச-125)



## இளநீர் விற்பனை கச்சதீவில் சூடு

யாழ்ப்பாணம், மார்ச் 4
கச்சதீவில் இளநீர் வியாபாரம் அமோகமாக இடம்பெற்றது.
கச்சதீவுப் பெருவிழா நேற்று ஆரம்பமாகியுள்ள நிலையில் பெருமளவான பக்தர்கள் கச்சதீவுக்குச் சென்றுள்ளனர்.
தற்போதைய வெப்பத்துடனான காலநிலை காரணமாக கச்சதீவில் பழச்சாறு, இளநீர் உள்ளிட்டவற்றின் வியாபாரங்கள் சூடு பிடித்துள்ளன.
நீண்டநேரம் கடலில் பயணம் செய்து கச்சதீவு செல்லும் பயணிகள் செவ்விளநீர் மற்றும் பழச்சாறுகளை அதிகளவில் வாங்கி தாகம் தணிப்பதை அவதானிக்கமுடிந்தது.
இலங்கை ரூபாவில் 300 ரூபாவுக்கும் இந்திய ரூபாவில் 80 ரூபாவுக்கும் செவ்விளநீர் விற்பனை செய்யப்பட்டது. (ச-125)

## குருநகர் இழுவைப் படகுகளால் பூநகரி மீனவர்கள் பாதிப்பு!

### பூநகரி பிரதேசசபை தவிசாளர் தெரிவிப்பு

கிளிநொச்சி, மார்ச் 4
பூநகரி பள்ளிக்குடா மேற்கு, கௌதாரிமுனை தெற்கு ஆகிய பகுதிகளில் யாழ்ப்பாணம் குருநகர் இழுவைப் படகுகள் தொழிலில் ஈடுபடுவது உள்ளூர் கடற்றொழிலாளர்களுக்கு பெரும் பாதிப்புகளை ஏற்படுத்தியுள்ளது என்று பூநகரி பிரதேசசபைத் தவிசாளர் சி.சிறிரஞ்சன் தெரிவித்தார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
பள்ளிக்குடா, கௌதாரிமுனையில் ஆழங்குறைந்த பகுதிகளில் இழுவைப் படகுகள் தொழிலில் ஈடுபட்டு நண்டு வலை, டிஸ்கோ வலை, கணவாய் குழை என்பவற்றை சேதப்படுத்துகின்றது. இதன் காரணமாக உள்ளூர்த் தொழிலாளர்களின் தொழில் முயற்சிகள் பாதிக்கப்பட்டுள்ளன. நாள்தோறும் 15 தொடக்கம் 50 வரையான இழுவைப் படகுகள் தொழிலில் ஈடுபடுகின்றன. இழுவைப் படகுகள் ஆழமான கடற்பகுதியில் தான் தொழிலில் ஈடுபடவேண்டும். இது கரையில் இருந்து 2 கிலோமீற்றர் தூரத்துக்கு உட்பட்ட இடங்களில் ஆழங்குறைந்த பகுதிகளில் தொழிலில் ஈடுபடுகின்றன.
இது தொடர்பாக கடற்றொழில் அமைச்சர், துறைசார் அதிகாரிகள் நேரடியாக வந்து அவதானிப்புகளை மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் - என்றார். (எ-14.13)

## கட்டளையை மீறி பட்டாசு வெடிப்பு

### பொலிஸ் சாவடி இருந்தும் நடவடிக்கை எடுக்கவில்லை

சாவகச்சேரி நகரசபையின் கட்டளையை மீறி சாவகச்சேரி சந்தியில் பட்டாசை வெடிக்க வைக்கின்றனர். அந்தப் பகுதியில் பொலிஸ் சாவடி இருந்தும் பொலிஸார் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை எனப் பொதுமக்களும் வர்த்தகர்களும் கவலை தெரிவித்துள்ளனர்.
நகரப் பகுதியில் நோயாளர்கள், வர்த்தகர்கள், வாகன சாரதிகள் மற்றும் பொதுமக்கள் எனப் பலர் நடமாடும் சந்தியில் பட்டாசு வெடிக்க வைப்பதால் ஏற்படும் புகை, சுவாசத்துக்கு பாதிப்பை ஏற்படும். இதனால் அதைத் தடை செய்யவேண்டும் என்று நகரசபையில் முறையிட்டதையடுத்து கடந்த ஆட்சிக் காலத்தில் -பத்து வருடங்களுக்கு முன்னர் - சந்தியில் பட்டாசு வெடிக்க வைக்க தடை செய்து அறிவித்தல் பலகையும் நடுகை செய்யப்பட்டிருந்தது.
இந்த நிலையில் அண்மைக்காலமாக மரண ஊர்வலம் செல்லும் வேளையில் சந்தியில் வகை, தொகையின்றி பட்டாசு வெடிக்க வைக்கின்றனர். அதனால் தாம் பாதிக்கப்படுகின்றனர் என்று பொதுமக்கள் தெரிவித்துள்ளனர். பட்டாசு வெடிப்பதற்கு தடை என நடுகை செய்யப்பட்டுள்ள அறிவிப்பு பலகைக்கு அருகில் பொலிஸ் சாவடி உள்ள போதிலும் பொலிஸார் நடவடிக்கை எடுக்காமல் வேடிக்கை பார்க்கின்றனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (எ-14.9)

## ஜனாதிபதி ரணிலுக்கு 'தங்க நெற்கதிர்' பரிசு

கொழும்பு, மார்ச் 4
விவசாயிகளுக்கு ஆற்றிய பணியைப் பாராட்டி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு 'ரன் வீ கரல' (தங்க நெற்கதிர்) என்ற பெயரிலான பரிசு விவசாயிகளால் வழங்கப்பட்டுள்ளது.
பொலநறுவையைச் சேர்ந்த விவசாயிகளால் இந்தப் பரிசு நேற்று கையளிக்கப்பட்டுள்ளது.
பொருளாதார நெருக்கடிக்கு மத்தியிலும் விவசாயிகளுக்குத் தேவையான உரங்களை உரிய நேரத்தில் வழங்கியமைக்காக நன்றி தெரிவிக்கும் வகையில் இந்தப் பரிசை பொலநறுவை விவசாயிகள் ஜனாதிபதிக்கு வழங்கினர். (ச-இ)

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய வருடாந்தத் திருவிழாக் காட்சிகள்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13th EDITION Jaffna International Trade Fair

# Jaffna International Trade Fair
# யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகச் சந்தை

JITF 2023

வாருங்கள்!

MARCH மார்ச்

3 4 5

9.00 மு.ப - 7.00 பி.ப

Muttraweli Grounds (Next to Jaffna Fort)
முற்றவெளி மைதானம் (யாழ் கோட்டைக்கு அருகில்)

CONCURRENTLY WITH
Higher Education & Career Exhibition
KALVI JAFFNA 2023

www.jitf.lk jitf.lk

















MAIN SPONSOR: TOKYO CEMENT GROUP
CO SPONSOR: Maliban Inspiring Goodness
ORGANIZED BY: LECS LANKA EXHIBITION & CONFERENCE SERVICES (PVT) LIMITED
IN ASSOCIATION WITH: CCIY

OFFICIAL PARTNERS

SNACK | SPICE: Ruhunu | ILLUMINATION: SOORYA | HYGIENE: SUN | T-SHIRT | PRINT MEDIA | EDUCATION: NorthernUNI | TYRE: AROMA | RENEWABLE ENERGY: Hayleys Solar | RIDING: LUMALA


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணிப் பிரச்சினைத் தீர்வுக்கு விவரங்கள் கோரினார் ஆளுநர்

## வடமாகாண காணி அமைச்சின் செயலாளர் தெரிவிப்பு

**முல்லைத்தீவு, மார்ச் 4**

**முல்லைத்தீவு, வவுனியா, கிளிநொச்சி, மன்னார் உள்ளிட்ட மாவட்டங்களிலுள்ள காணிப்பிரச்சினைகளைத் தீர்க்க அந்தந்த மாவட்டங்களிலுள்ள அனைத்துப் பிரதேச செயலர்களிடமும் காணி தொடர்பான விவரங்களை வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா கோரியுள்ளார்.**

காணிப் பிரச்சினைகள் தொடர்பில் வடமாகாண ஆளுநர் தலைமையிலான கலந்துரையாடல் ஒன்று, முல்லைத்தீவு உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்றது.

கலந்துரையாடலின் பின்னர் வடக்கு மாகாண காணி அமைச்சின் செயலாளரும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளருமான ம.பற்றிக்டிறஞ்சன் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், மன்னார், வவுனியா, கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் காணி விடயங்கள் தொடர்பாக அந்தந்த மாவட்ட பிரதேச செயலர்களுடன் கலந்துரையாடப்பட்டுள்ளது.

காணிப்பிரச்சினைகளில் எவ்வாறான விடயங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படவேண்டும் என்றும் காணி விடயங்களில் பிரதேச செயலர்கள் முகங்கொடுக்கும் பிரச்சினைகள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டன.

இறுதியில் காணிப்பிரச்சினைக்கு தீர்வுகளைக் காண்பதற்காக பிரதேச செயலர்களிடமிருந்து சகல விவரங்களும் ஆளுநரால் கோரப்பட்டுள்ளன. அதற்கான காலஎல்லையும் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் பெர்மிட், லீஸ்லான்ட் சம்பந்தமாகவும் வழங்கப்பட்ட பெர்மிட்களுக்கு கொடுக்கப்பட்டுள்ள அனுமதி சம்பந்தமாகவும் காலஎல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு அதன்படி அந்த வேலைகளை முடிவுறுத்துமாறு பிரதேச செயலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது- என்றார். (எ-14,19)

# இன்றைய நாள் (ராசிபலன்)





**மேடம்:** காரிய அனுகூலமான நாள். புதிய முயற்சி சாதகமாக முடியும். தேவையான பணம் கையில் இருந்தாலும், வீண்செலவுகளால் மனம் சஞ்சலப்படும். சில சங்கடங்கள் ஏற்படக்கூடும்.



**இடபம்:** எதிர்பார்த்த பணவரவு கிடைக்கும். மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால் ஒருவரையொருவர் அனுசரித்துச் செல்வது நல்லது. எதிர்பாராத செலவுகள் ஏற்படலாம்.



**மிதுனம்:** நன்மைகள் நடைபெறும் நல்ல நாள். முடிவுகள் நல்லபடியாக அமையும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகும். வாழ்க்கைத்துணை உங்கள் முயற்சிகளுக்குத் துணையிருப்பார்.



**கடகம்:** உறவுகளால் ஆதாயம் கிடைக்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும். சில பிரச்சினைகள் ஏற்படும். எதிர்பாராத பொருள் சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டாகும்.



**சிம்மம்:** சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். எதிர்பாராத செலவுகள் ஏற்பட்டாலும் தேவையான பணம் இருப்பதால் சமாளித்துவிடுவீர்கள். எதிரிகள் வகையில் எச்சரிக்கையாக இருக்கவும்.



**கன்னி:** உற்சாகமான நாள். முக்கியமான முடிவுகள் எதையும் இன்று எடுக்க வேண்டாம். விட்டுக்கொடுத்துச் செல்வது நல்லது.. உங்கள் முயற்சிகளுக்கு ஆதரவு கிடைக்கும்.



**துலாம்:** புதிய முயற்சிகளில் ஈடுபட வேண்டாம். வழக்கமான பணிகளில் மட்டுமே கவனம் செலுத்தவும். சோர்வு உண்டாகலாம். உடல் நலனில் கவனம் தேவை.



**விருச்சிகம்:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்புண்டு. குடும்பத்தினரின் விருப்பத்தைப் பூர்த்திசெய்வீர்கள். எதிர்பார்த்த உதவி கிடைக்கும். மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்க வாய்ப்பு உள்ளது.



**தனுசு:** புதிய முயற்சிகளில் ஈடுபட வேண்டாம். எதிர்பார்க்கும் காரியம் முடிவதில் தாமதம் உண்டாகும். அலைச்சலும் தேவையற்ற செலவுகளும் ஏற்படக்கூடும்.



**மகரம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். உடல்நலனில் கவனம் தேவை. ஆரோக்கியக்குறைவு ஏற்பட்டு சரியாகும். வீண் மனவருத்தம் ஏற்படக்கூடும்.



**கும்பம்:** கருத்து வேற்றுமை நீங்கி, அந்நியோன்னியம் அதிகரிக்கும். தன்னம்பிக்கை மற்றும் தைரியத்துடன் செயற்படுவீர்கள். காரியங்களில் வெற்றி உண்டாகும்.



**மீனம்:** பொறுமையுடன் இருக்க வேண்டிய நாள். எதிர்பாராத செலவுகளால் கடன் வாங்க நேரிடும். முடிவுகள் எடுப்பதில் அவசரம் வேண்டாம். பேசும்போது பொறுமை தேவை.

# கசிப்பு விற்ற பெண் உரும்பிராயில் கைது

யாழ்ப்பாணம், மார்ச் 4

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உரும்பிராய் பொக்கணைப் பகுதியில் தொடர்ச்சியாக கசிப்பு விற்பனையில் ஈடுபட்ட பெண்ணொருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர். அதேபகுதியைச் சேர்ந்த 38 வயதுடைய பெண்ணே நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இவர் ஏற்கனவே கசிப்பு வியாபாரத்தில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் பல வழக்குகள் நிலுவையில் உள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர். சந்தேகநபரை மேலதிக விசாரணையின் பின் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர். (ச-26)

## மாசிமகம்

சாவகச்சேரி, மார்ச் 4

எழுதுமட்டுவாழ் விளுபளை ஸ்ரீமீனாட்சி அம்பாள் கோயில் மாசிமகப் பெருவிழா நாளைமறுதினம் திங்கட்கிழமை முற்பகல் 9.25 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும். (ய-9)

# பொதுவெளியில் கஞ்சா நுகர்ந்த மூவர் கைது!

யாழ்ப்பாணம், மார்ச் 4

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உரும்பிராய் சந்திப் பகுதியில் பொதுவெளியில் கஞ்சா நுகர்ந்த மூவர் கைது செய்யப்பட்டனர் என்று கோப்பாய் பொலிஸார் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட மூவரும் திருநெல்வேலி மற்றும் யோகபுரம் பகுதியைச் சேர்ந்த 30 வயதுக்குக் குறைந்தவர்கள் எனவும் கைதுசெய்யப்பட்டவர்களிடம் இருந்து குறிப்பிட்ட அளவு கஞ்சா மீட்கப்பட்டது என்றும் கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர். மேலதிக விசாரணைகளின் பின்னர் சந்தேக நபர்களை நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (எ-14,26)

# நம்பிக்கை என்னும் தூயஆவியின் கனி

'ஆண்டவரின் திருப்பெயரை அறிக்கையிட்டு மன்றாடுகிறவர் எவரும் மீட்புப் பெறுவர்' (உரோ.10:13). நாம் ஒவ்வொருவரும் அருள்வாழ்வில் வாழ அழைக்கப்பட்டுள்ளோம். நம்பிக்கையை இலக்கணமாகக் கொண்டு நிறைந்துள்ளது திருவிவிலியம். நாம் எதிர்நோக்கி இருப்பவை கிடைக்கும் எனும் உறுதியே எமது நம்பிக்கை. மண்ணுலகில் நம்பிக்கை கொண்ட மனிதரையே விண்ணுலகில் இருக்கின்ற நம் தந்தை அவரோடு வாழ அழைக்கின்றார். அன்று இஸ்ரயேல் மக்கள் கொடிய பத்து வாதைகளையும் வெற்றியுடன் கடந்து வந்தமைக்குக் காரணம் தம்மைப் படைத்த கடவுள் மேல் கொண்ட அளவு கடந்த அசையாத நம்பிக்கையே. நம்பினால் தானே நாம் கடவுளின் மாட்சியைக் காணமுடியும்.




நம்பிக்கை எனும் தூய ஆவியாரின் கனி இருந்தால் மட்டுமே ஆன்மாக்களின் மீட்பு என்பது உறுதி. ஆண்டவரின் மீது நம்பிக்கை கொண்டிருப்போர் புதிய ஆற்றல் பெறுவர். பல்வேறு விதங்களில் ஆசீர்வதிக்கப்பட்டுள்ள எம்மிடத்தில் ஆண்டவர் நம்பிக்கை எனும் கனியைத் தேடுவார். கண்ணீர், அழுகை, கவலை, துயரம், வெறுப்பு, பகையோடு வாழ்ந்து கொண்டிருக்கும் எம் நம்பிக்கையற்ற வாழ்விலிருந்து பிறருக்கு உதவும் உறவின் பாலங்களாய் நாம் மாறும்போது எமது உடனிருப்பு பிறரை ஊக்கப்படுத்தும் நம்பிக்கையாய் மாறும்.

வெறுமனே பக்திச் சடங்குகளுக்குள் நம்மைப் புதைத்துவிடும் ஒரு களமாக இந்தத் தவக்காலத்தைக் கடந்து செல்வதைத் தவிர்த்து உயிர்த் துடிப்புள்ள நம்பிக்கைதரும் வாழ்வை முழுமனித வாழ்வுக் கண்ணோட்டத்தில் செயல்படுத்தும் செயல் வீரர்களாக நாம் மாறவேண்டும். இயேசுவின் மனநிலை, மதிப்பீடுகள், இலக்குகள், அணுகுமுறைக்ள், செயற்பாடுகள் எம்முடையனவாக மாறவேண்டும்.

**போ.ற.சைலேந்தினி**

# கட்டுடைப் பகுதியில் ஓட்டோவுக்கு தீ வைப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 4

மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மானிப்பாய்- கட்டுடைப் பகுதியில் முச்சக்கரவண்டி ஒன்றுக்குத் தீ வைக்கப்பட்டது என்று மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இரவு முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

மானிப்பாய் கட்டுடைப் பகுதியில் வீட்டின் முன்னே நிறுத்தப்பட்டிருந்த முச்சக்கர வண்டிக்கே தீ வைக்கப்பட்டுள்ளது என்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

குடும்பத் தகராறில் ஏற்பட்ட பிரச்சினை காரணமாகவே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது என்று ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது என்று மானிப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார். (எ-14,125)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

மலர்வு
04 - 02 - 1935



உதிர்வு
01 - 03 - 2023

## திரு. கந்தையா சந்திரசேகரம்

(Retired Executive Officer, Imports Exports Jaffer Jee Bro's, Colombo.)

இருபாலை கிழக்கு, கோப்பாயைப் பிறப்பிடமாகவும், கொழும்பு, இருபாலை கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. கந்தையா சந்திரசேகரம் கடந்த (01.03.2023) புதன்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - தையல்நாயகி தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வனும், மட்டுவில் சந்திரசேகரம் (நடுவில்) சின்னம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற பாக்கியத்தின் அன்புக் கணவரும், சத்தியராணி, விக்னேஸ்வரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், கபிலன், கௌத்திரிகா ஆகியோரின் மாமனாரும், முத்துக்குமாரசாமி, மகேஸ்வரி, திருநாவுக்கரசு ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற அமிர்தயோகம், இராமலிங்கம், அருந்ததிதேவி ஆகியோரின் மைத்துனரும், மிதுக்ஷா, அபிநயா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.03.2023) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக இருபாலை கிழக்கு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

077 767 7750
075 701 8709 } மகன்

தகவல் :
மகன், மகள், மருமக்கள்.

(CS 49378 ) (3/6)

# மரண அறிவித்தல்

தோற்றம்
28 - 04 - 1947



மறைவு
03 - 03 - 2023

## திருமதி ஞானகணேசன் மனோரஞ்சிதம் (பட்டு)

நாச்சிமார் கோயிலடி தெல்லிப்பளையைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட திருமதி ஞானகணேசன் மனோரஞ்சிதம் (பட்டு) நேற்று (03.03.2023) வெள்ளிக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரம் சின்னம்மா தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்ற செல்லத்துரை தங்கம்மா தம்பதியினரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற DR.ஞானகணேசனின் அன்பு மனைவியும், ஜெயமுகன்(லண்டன்), ஜெயகௌரி(ஆசிரியை), ஜெயசுபாஜினி(ஆசிரியை) ஆகியோரின் அன்புத் தாயாரும், ஜெனிதா(லண்டன்), ஈசன்(பதில் முதல்வர்-யாழ்.மாநகரசபை),சுதாகரன் ஆகியோரின் அன்பு மாமியாரும், டனுக்சன், டினுக்சன், அக்சயா, அபிநயா, துவாதியா, தீனரீசன், டோலினா, நயாரா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், மனோகரனின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.03.2023) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.15,முதலியார் லேன்,
நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்
குடும்பத்தினர்.
077 284 4472

# மரண அறிவித்தல்

அன்னை மடியில்
12 • 03 • 1932



ஆண்டவன் அடியில்
03 • 03 • 2023

## திருமதி பரமேஸ்வரி நாகராஜா

இல. 1010/24, கே.கே.எஸ், வீதி, நாச்சிமார் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரி நாகராஜா நேற்று (03.03.2023) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பு - முத்தம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற நாகலிங்கம் - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற நாகராஜாவின் மனைவியும், நவரஞ்சினி, காலஞ்சென்ற நவீந்திரன் மற்றும் மனோரஞ்சினி ஆகியோரின் பாசமிகு தாயாரும், சிவா, அமிர்தாம்பிகை, பாலகிருஸ்ணன் ஆகியோரின் மாமியாரும், இராஜேஸ்வரி (ராசம்) அவர்களின் சகோதரியும், கணபதிப்பிள்ளையின் மைத்துனியும், சயந்தன் + தாட்சாயினி, துஸ்யந்தன், மேகலா + விமலேஸ்வரன், அனந்தன், துஷான் + ஹம்ஷா, துஷானி ஆகியோரின் அருமைப் பேர்த்தியும், டியான், லினா ஆகியோரின் பூட்டியும், கௌரி, காலஞ்சென்ற யமுனா மற்றும் பிரதீபன் ஆகியோரின் பெரியதாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.03.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கே.கே.எஸ், வீதி,
நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

தகவல்:-
குடும்பத்தினர்.

077 957 6672

(CS 49304)4,6

# மரண அறிவித்தல்

தோற்றம்
09 - 07 - 1952



மறைவு
02 - 03 - 2023

## பொன்னய்யா குணலிங்கம் (குவா)

கோண்டாவில் கிழக்கை பிறப்பிடமாகவும், புத்தளத்தை வதிவிடமாகவும் கொண்ட பொன்னய்யா குணலிங்கம் கடந்த (02.03.2023) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னய்யா பாக்கியம் தம்பதியினரின் புதல்வனும், ராசமலர்(ராசாத்தி) அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான மகேந்திரன், இரத்தினசிங்கம் மற்றும் மனோன்மணி, செல்வரத்தினம்(ஜெயந்தன்) ஆகியோரின் சகோதரரும், ரொஷான், கவித்தா, கஜந்தா, டனித்தா ஆகியோரின் பாசமிகுந்த தந்தையும், விக்கினேஸ்வரன், திலீபராஜ், சுஜந்தன் ஆகியோரின் மாமனாரும் ரிஷோன், கதீஷன், கிஷானா, சஜீஷன், ஜீவிக்கா, ஆதேஷ், ஆருஷி, டிஷானி ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம்(06.03.2023) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மு.ப. 10.00 மணியளவில் கோண்டாவில் இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இராமகிருஷ்ணவீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்

தகவல்
குடும்பத்தினர்.
077 291 4827

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மின்கட்டண அதிகரிப்பால் ஆடைத்துறைக்குப் பாதிப்பு

கொழும்பு, மார்ச் 4

மின்கட்டண அதிகரிப்பு எதிர்காலத்தில் ஆடைத்துறையில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தும் என ஒன்றிணைந்த ஆடைத் தொழிற்றுறைச் சங்கம் தெரிவித்துள்ளது.

அந்தச் சங்கத்தின் உபதலைவர் ப்ளீக்ஸ் ஏ பெர்னாண்டோ தெரிவித்துள்ளதாவது:-

ஆடைகளுக்கான முன்பதிவுகள் தற்போது குறைந்துள்ளன. மின்கட்டண அதிகரிப்பு காரணமாக உற்பத்திச் செலவு 5 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. அத்துடன் நாட்டுக்கு வழங்கப்பட்ட ஜீ.எஸ்.பி. ப்ளஸ் வரிச்சலுகையை மீளப் பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகள் மந்தகதியிலேயே இடம்பெறுகின்றன.

இந்தநிலையில் மின்கட்டண அதிகரிப்பால் ஆடைத்துறையில் வீழ்ச்சி ஏற்பட்டு எதிர்மறையான தாக்கம் எதிர்காலத்தில் உருவாகும் - என்றார். (ச-இ)

# உள்ளூராட்சிசபை பொருத்தும் வீதிவிளக்குகள் அடிக்கடி பழுது

## தரமற்றவை பொருத்தப்படுகிறதா? குழப்பத்தில் பொதுமக்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 4

உள்ளூராட்சிசபைகளால் கொள்வனவு செய்து பொருத்தப்படும் வீதிவிளக்குகள் விரைவில் பழுதடைகின்றன என்று பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.

வீதிவிளக்குக் கொள்வனவுக்கு கேள்வி கோரப்பட்டு ஏற்றுக்கொள்ளப்படும் ஒப்பந்தகாரரால் மாதிரிகள்சபை அமர்வுகளில் முன்வைக்கப்பட்டு தொழில்நுட்ப வல்லுநர்கள் பார்வையிட்டு பரிந்துரை செய்யப்படும். அதன்பின் மின்குமிழ்கள் சபை உறுப்பினர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டு உத்தரவாதத்துடன் கொள்வனவு செய்யப்பட்டு வீதிகளில் பொருத்தப்படுகின்றன.

ஆனால் ஒரு மின்குமிழ் கூட ஆறு மாதங்களுக்கு மேல் ஒளிர்வதில்லை. உத்தரவாத காலத்துக்குள் பழுதடையும் மின்விளக்குகள் களஞ்சியப்படுத்தப்படுகின்றனவே தவிர அவற்றை மாற்ற உள்ளூராட்சிசபைகள் முன்வருவதில்லை.

வீட்டு மின்விளக்குகளுக்கு பொருத்த இரண்டு வருட உத்தரவாதத்துடன் கொள்வனவு செய்யும் மின்குமிழ்கள் உத்தரவாதகாலம் முடிந்ததும் மேலும் இரு வருடங்கள் ஒளிர்கின்றன. ஆனால் உள்ளூராட்சிசபைகளால் கொள்வனவு செய்து பொருத்தப்படும் வீதிவிளக்குகள் ஆறு மாதங்கள் கூட தாக்குப் பிடிக்க முடியாமல் பழுதடைகின்றன என மக்கள் தெரிவிக்கின்றனர். வீதிவிளக்குகளுக்கு கிடைக்கும் மின்சாரத்தின் அளவு அதிகமாக உள்ளதா? அல்லது தரமற்ற மின்விளக்குகள் உள்ளூராட்சிசபைகளால் கொள்வனவு செய்யப்படுகிறதா? என்று மக்கள் குழப்ப நிலையில் உள்ளனர்.

உள்ளூராட்சிசபை நிதியில் மேற்கொள்ளப்படும், வீதிப் புனரமைப்புப் பணிகள் அடுத்த வருடத்துக்குள் பழுதடைந்து மக்கள் பயன்படுத்த முடியாத அளவுக்கு சேதமடைகின்றன. கனரக வாகன பாவனைகள் அதிகரித்துள்ள நிலையில் அவற்றின் பாவனைக்கேற்ற வகையில் புனரமைப்புச் செய்யாமல் மக்களை ஏமாற்றும் செயற்பாடாக வீதி அபிவிருத்திப் பணிகள் காணப்படுகின்றன.

மக்களின் வரிப்பணத்தின் மூலம் செய்யப்படும் ஒவ்வொரு வேலைத்திட்டமும் மக்களுக்கு பயன்படக்கூடிய வகையில் செய்யப்படுவதில்லை. பணிகளை மேற்கொள்ள உறுப்பினர்கள் காட்டும் அக்கறையை புனரமைப்பு தரமாக உள்ளதா என்பதில் அக்கறை செலுத்துவதில்லை எனவும் விசனம் வெளியிட்டுள்ளனர். (எ-14-9)




## மெய்வன்மைப்போட்டி

கிளிநொச்சி, மார்ச் 4

அக்கராயன் மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்றது.

விளையாட்டு நிகழ்வுகளில் பங்குபற்றி வெற்றிபெற்ற மாணவர்களுக்கு பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

பாடசாலை முதல்வர் திருமதி இ.ரவீந்திரநாதன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி தெற்கு வலயக் கல்விப்பணிப்பாளர் கி.கமலராஜன் கலந்து கொண்டார். (எ-14-13)

# விவசாயிகளுக்கு உபகரணங்கள்

சாவகச்சேரி, மார்ச் 4

தென்மராட்சிப் பிரதேசத்தில் தெரிவு செய்யப்பட்ட 33 கிராமஅலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த விவசாயிகளுக்கு விவசாயத்தை மேற்கொள்வதற்குரிய உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன.

தென்மராட்சிப் பிரதேசசெயலகமும் விவசாயத் திணைக்களமும் இணைந்து வேள்ட் விஷன் லங்கா நிறுவனத்தின் நிதி அனுசரணையில் உபகரணங்களை வழங்கவுள்ளனர்.

பிரதேசத்தில் காணப்படும் காலநிலைக்கேற்ப விவசாயம் மேற்கொள்ளும் விவசாயிகளை தெரிவு செய்யும் நடவடிக்கை தற்போது இடம்பெற்று வருகிறது.

எனவே தெரிவுசெய்யப்பட்ட பிரிவுகளைச் சேர்ந்த விவசாயிகள் தமது பிரிவு கிராமஅலுவலருடன் தொடர்புகொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-14-9)



ஜே/131 கிராமசேவகர் பிரிவுக்குட்பட்ட சாவற்காடு கிராமத்தில் சமுர்த்திப் பயனாளிகளுக்காக சமுர்த்தி உத்தியோகத்தரால் ஏற்பாடு செய்யப்பட்ட போதைத் தடுப்புடன் மகிழ்ச்சியான குடும்பமும் எனும் தொனிப்பொருளில் விழிப்புணர்வு நிகழ்வு கடந்த புதன்கிழமை நடைபெற்றது. (ய-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வட்டுக்கோட்டைப்பிரதேசமருத்துவமனைக்குயாழ்.பரியோவான் கல்லூரியின்பழைய மாணவர்களால்உருவாக்கப்பட்டஈகிள்கெயர் ரிறஸ்ட் அமைப்பால் சிறுவர்களுக்கான ஒரு தொகுதி மருந்துப் பொருள்கள்நேற்றுமுன்தினம்செவ்வாய்க்கிழமைவழங்கப்பட்டன. மேற்படிமருத்துவமனையில்நடைபெற்றநிகழ்வில்சிறுவர்களுக்கான ஒருதொகுதிமருந்துகளைஈகிள்கெயர்ரிறஸ்ட் அமைப்பினர்சார்பில் யாழ்.பரியோவான் கல்லூரியின் முன்னாள் அதிபர் வண.என்.ஜே. ஞானப்பொன்ராஜா, முன்னாள்உப அதிபர்எஸ்.அன்ரனிப்பிள்ளை ஆகியோர் இணைந்து மேற்படி மருத்துவமனையின் பொறுப்பு மருத்துவ அதிகாரி மருத்துவர்.ரதினி காந்தநேசனிடம் கையளித்தனர். (ய-66)

## மகனின்...

ஏற்படுத்தியுள்ளது.

வவுனியா, நெடுங்கேணி பகுதியில் மாட்டுடன் மோதுண்ட விபத்தில் படுகாயமடைந்த நிலையில் வவுனியா மருத்துவமனையில் கடந்த புதன்கிழமை சேர்க்கப்பட்ட இராசரட்ணம் கனகராஜா (வயது-43) என்ற நபர் நேற்றுமுன்தினம் உயிரிழந்தார். குறித்த நபரின் மரணச் செய்தி அவருடைய தாயாரான இராசரட்ணம் வீரம்மா (வயது -82) என்பவருக்கு நேற்றுத் தெரிவிக்கப்பட்டது. இதையடுத்தே அவர் அதிர்ச்சியில் உயிரிழந்தார். இருவருடைய மரணச் சடங்குகளும் கிளிநொச்சி மயில்வாகனபுரம் பகுதியில் இடம்பெறவுள்ளது. (அ-ம)

## வர்த்தக...

மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜாவால் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

'வடக்கின் நுழைவாயில்' என்ற தொனிப்பொருளில் ஆரம்பிக்கப்பட்ட இந்தக் கண்காட்சி நேற்று, இன்று, நாளை என்று மூன்று தினங்கள் இடம்பெறுகின்றது. இந்தக் கண்காட்சியில் கொழும்பின் பிரபல வர்த்தக நிறுவனங்களினதும், உள்ளூர் உற்பத்தியாளர்களினதும் பல்வேறு உற்பத்திகள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

நேற்றைய முதல்நாள் நிகழ்வில், வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா, யாழ் இந்தியத் துணைத்தூதுவர் ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ்கரன், யாழ்ப்பாணம் மாவட்டச் செயலர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன், யாழ். மாநகர ஆணையாளர் ஜெயசீலன், யாழ்ப்பாண தொழில்துறை மன்றத் தலைவர் விக்னேஷ் எனப் பலரும் கலந்துகொண்டனர். - (அ-ம20,26,125)

## தொப்புள்கொடி...

அத்துமீறிய மீன்பிடி தொடர்பிலும், தமிழக - இந்திய மீனவர்களுக்கு இடையில் உள்ள இதர பிணக்குகள் தொடர்பிலும் தமிழக மீனவர்களுக்கும், வடபகுதி மீனவர்களுக்கும் இடையில் கச்சதீவில் நேற்றுப் பேச்சுக்கள் இடம்பெற்றன. இதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே மன்னார் மாவட்ட மீனவர் சங்க பிரதிநிதி டிபோரன்ஸ் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தொப்புள்கொடி உறவென்று நீங்கள் கூறுகின்றீர்கள். ஆனால், எங்கள் தொப்புளுடன் வயிற்றையும் சேர்த்து உங்கள் இழுவைமடிப் படகுகளால் இழுத்துச் செல்கின்றீர்கள். எமது நாட்டில் விலைவாசிகள் உச்சம் தொட்டுள்ளன. நாங்கள் வாழமுடியாத நிலையில் தற்போதுள்ளோம். ஆனால், நீங்களோ மீண்டும் மீண்டும் எங்களைத் துன்புறுத்துகின்றீர்கள். எங்களை மீண்டும் மீண்டும் சோதனைக்கு உட்படுத்துகின்றீர்கள்.

இந்தியாவில் பிற மாநிலமொன்றுக்குள் இவ்வாறு அத்துமீறி உங்களால் செயற்படமுடியுமா? அவ்வாறு செயற்பட்டால் உங்களுக்கு என்ன நடக்கும் என்பது உங்களுக்கே நன்கு தெரியும். எனவே, எக்காரணம் கொண்டும் இந்திய மீனவர்களை மீன்பிடிப்பதற்காக இலங்கைக் கடலுக்குள் அனுமதிக்கமுடியாது - என்றார். (அ-ம-125)

## கஞ்சாவுடன்...

வைத்திருந்த குற்றச்சாட்டில் நேற்றைய தினம் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். கண்காணிப்புப் பணியில் ஈடுபட்ட பொலிஸார் சந்தேகத்தின் அடிப்படையில் மேற்கொண்ட சோதனையின்போதே சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டார். அவரிடம் இருந்து 2 கிராம் கஞ்சா மீட்கப்பட்டுள்ளது. சந்தேகநபரிடம் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (ம-23)

## கச்சதீவில் தீ...

கடற்படையினர் தீயைக் கட்டுக்குள் கொண்டுவந்தனர்.

திருவிழாவுக்காகச் சென்ற பொதுமக்கள் கூடாரம் அமைத்துத் தங்கியுள்ள பகுதியிலிருந்து சற்றுத் தொலைவில் நேற்று மாலை 5.30 மணியளவில் இந்த இடர் ஏற்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் கடற்படையினருக்கு உடனடியாகத் தகவல் வழங்கப்பட்டது. விரைந்து செயற்பட்ட கடற்படையினர் தீயைக் கட்டுக்குள் கொண்டுவந்தனர். (அ-ம-125)

## கச்சதீவில் இன்று...

நேற்று மாலை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. கொடியேற்றத்தைத் தொடர்ந்து சிறப்பு ஆராதனைகள் முன்னெடுக்கப்பட்டன. இன்று காலை யாழ்ப்பாணம் மறைமாவட்ட ஆயர் ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையின் தலைமையில் திருவிழாத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படவுள்ளது.

கச்சதீவுப் பெருவிழாவுக்காக இம்முறை அதிகளவு இந்திய பக்தர்கள் வருகைதந்ததை அவதானிக்கக்கூடியதாக இருந்தது. 60 நாட்டுப்படகுகள் மற்றும் 16 இழுவைமடிப் படகுகளில் 2 ஆயிரத்து 100 இந்தியர்கள் விழாவில் கலந்துகொண்டனர். இலங்கையில் இருந்து 2 ஆயிரத்து 800 பக்தர்கள் கலந்துகொண்டனர். திருவிழாவுக்காக 200 வியாபாரிகளும் அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர். (அ-ம-125)


**விற்பனைக்கு**

பாவித்த நல்ல நிலையில் உள்ள இரண்டு மர அலுமாரியும் ஒரு ஸ்ரீல் அலுமாரியும் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 071 814 8150

**வாடகைக்கு**

யாழ். வைத்தியசாலை வீதியில் 1 ஆம் மாடிக்கட்டடம் வாடகைக்கு உண்டு. கடைகள் / அலுவலகங்களுக்கு ஏற்றது.

077 162 0626

**வீட்டுப் பராமரிப்பாளர் தேவை**

சுன்னாகத்தில் உள்ள வீடு ஒன்றிற்கு ஆண் பராமரிப்பாளர் தேவை. சிங்களம் பேசக்கூடியவர்களும் விரும்பத்தக்கது. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும். ஆர்வமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு: 077 394 5982

**A/L DAY-Class**
**பௌதிகவியல்.**

By M. கருணாநிதி B.Sc(Hons)
- அலகுகள் ஆரம்பத்திலிருந்து.
- NEW SCIENCE COLLEGE, JAFFNA
- PHYSICS WORLD, NALLUR.

077 618 3064

**பெயர் மாற்றம்**

**வீரசிங்கம் றெஜிநோட்** ஆகிய நான் இன்று முதல் எனது பெயரை **வீரசிங்கம் அன்றூபேருஜன்** என மாற்றம் செய்வதோடு இனி வரும் சகல ஆவணங்களிலும் **வீரசிங்கம் அன்றூபேருஜன்** என்றே கையொப்பமிட்டு பயன்படுத்துவேன் என இலங்கை சோசலிச குடியரசு மக்களுக்கு உறுதிப்படுத்துகின்றேன்.

(CS 1085)(3/6) **வீரசிங்கம் அன்றூபேருஜன்**


**Special General Meeting**

The Vembadi Girls' High School Old Girls' Association

Venue : Thanthai Chelva Auditorium
(Jaffna Central College
114, Rajendra Prasad Road, Jaffna)

Date : 12 March 2023

Time : 9 am

It has been decided to hold the Special General Meeting on 12 March 2023 as decided in the last Annual General Meeting to deliberate on constitutional amendments and other matters of important,

All members of Vembadi Girls' High School Old Girls' Association, Jaffna are welcome.

**The Secretary**

## மரண அறிவித்தல்

தோற்றம் 22 . 02 . 1982



மறைவு 02 . 03 . 2023

### திரு. ஞானசூரியர் சிவக்குமரன்

**(ஊழியர் விளையாட்டுத் திணைக்களம், மருதனார்மடம். வடமாகாணம்)**

நயினாதீவு 3ஆம் வட்டாரத்தினைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திரு.ஞானசூரியர்-சிவக்குமரன் அவர்கள் கடந்த (02.03.2023) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஞானசூரியர் மற்றும் விஜயலட்சுமி தம்பதியரின் ஏக புதல்வனும், காலஞ்சென்றவர்களான காசிலிங்கம் - பெரியநாயகி, இராமலிங்கம் - நாகமுத்து ஆகியோரின் அருமைப் பேரனும், DR.K.M. சரவணமுத்து DR.விக்கினேஸ்வரன் (பொறியியலாளர்), DR. புஸ்பராஜா, குகபாலன் (கணக்காளர்), கரிகரன் ஆகியோரின் தந்தைவழிப் பெறாமகனும், சிவஞானபூஷணியின் மருமகனும், மு.இ.ஜெயலட்சுமி (ஓய்வுநிலை ஆசிரிய ஆலோசகர் - தீவக் வலயம்), தனலட்சுமி (ஓய்வுநிலை உதவி அதிபர், யாழ். மத்திய கல்லூரி), திருமதி ஞானகௌரி - விக்கினராஜேஸ்வரன் (ஓய்வு நிலை பிரதி அதிபர் நிக்கவெரட்டிய முஸ்லிம் மத்திய கல்லூரி) ஆகியோரின் தாய்வழிப் பெறாமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.03.2023) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியளவில் நடைபெற்று, நயினாதீவு சல்லிபரவை இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**3ஆம் வட்டாரம், நயினாதீவு.**
**077 7110912**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS 1216) 1x6

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## தேர்தலுக்கு...

தேர்தல்கள் ஆணைக்குழுவால் இந்த மாதம் 9ஆம் திகதி உள்ளூராட்சித் தேர்தல் நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும், தேர்தலுக்கான நிதியைவிடுவிப்பதற்குதிறைசேரிபல்வேறுபட்ட இழுத்தடிப்புக்களை மேற்கொண்டு வந்தது. இது தொடர்பில் திறைசேரியால் உயர்நீதிமன்றத்துக்கும் தெரியப்படுத்தப்பட்டது. இந்த நெருக்கடிகளை அடுத்து, திட்டமிட்டபடி தேர்தலை நடத்தமுடியாதுள்ளது என்று தெரிவித்த தேர்தல்கள் ஆணைக்குழு தேர்தலைப் பிற்போட்டது. இதனையடுத்து தேர்தலுக்கான நிதியை விடுவிக்குமாறு திறைசேரிக்கு உத்தரவிடக்கோரி, ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார வழக்கொன்றைத் தாக்கல் செய்தார். இந்த வழக்கு நேற்று விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போதே, '2023ஆம் ஆண்டுக்கான வரவு -செலவுத்திட்டத்தில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காக ஒதுக்கப்பட்ட நிதியை திறைசேரியால் தடுத்துவைக்கமுடியாது' என்று திறைசேரியின் செயலாளருக்கு உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது. (அ-ம)

## போராட்டங்கள்...

மொன்றை ஏற்படுத்துவதற்கு இனி ஒரு போதும் இடமில்லை - என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

திருகோணமலை விமானப்படைத் தளத்தில் நேற்று இடம்பெற்ற விசேட நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரசமைப்பை வெறும் காகித ஏடுகளாக்க இடமளிக்கக்கூடாது. இலங்கை ஜனநாயக சோஷலிஸக் குடியரசு என்றே அரசமைப்பின் முதலாவது சட்டப்பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் அரசமைப்பானது குடியரசுக்காகவே உள்ளது என்பது உறுதிப்படுகிறது. எனவே அரசமைப்பின் ஏனைய அனைத்து பிரிவுகளும் மக்களின் இறையாண்மை, தேசிய கீதம் மற்றும் தேசியக் கொடி என்பவற்றை பாதுகாப்பதற்கானதாகவே உள்ளன.

முதலில் நாட்டைப் பாதுகாக்கவேண்டும். இறையாண்மை, சுயாதீனம் மற்றும் சுதந்திர நாடாக இலங்கை இருக்க வேண்டும். இந்த நிலைக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் எந்தவொரு தரப்புக்கும் சந்தர்ப்பம் வழங்கிவிடக்கூடாது. இதுவே முதல் கடமையாகின்றது. நாட்டின் ஒருமைப்பாட்டை பாதுகாக்க வேண்டுமாயின் முதலில் இறையாண்மையைப் பாதுகாக்கவேண்டும். 1983ஆம் ஆண்டு தொடக்கம் 2009ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியானது நாட்டின் ஒருமைப்பாட்டுக்கும் இறையாண்மைக்கும் அச்சுறுத்தலாக அமைந்தது. முப்படைகளும் பொலிஸாரும் உயிர்களைத் தியாகம் செய்து அந்த அச்சுறுத்தலான காலகட்டத்திலிருந்து நாட்டைப் பாதுகாத்தனர். எனவே நாட்டின் ஒருமைப்பாட்டை பாதுகாப்பதாயின் நாட்டு மக்களிடையிலான ஒற்றுமையையும் பாதுகாக்கவேண்டும். தமிழ், சிங்கள மற்றும் முஸ்லிம் உட்பட அனைத்து இன மக்களிடையே இலங்கையர் என்ற ஒற்றுமை காணப்படவேண்டும். அனைத்து இன மக்களினதும் மதம் மற்றும் கலாசாரம் என்பன பாதுகாக்கப்படவேண்டும். அவ்வாறு இல்லாது பிளவுகள் ஏற்படுமாயின் நாட்டின் ஒருமைப்பாட்டுக்கு அது பெரும் அச்சுறுத்தலாகிவிடும்.

அதேபோன்று நிறைவேற்று அதிகாரம், சட்டவாக்கசபை மற்றும் நீதிமன்றம் ஆகிய துறைகளில் இலங்கையின் சட்ட பூர்வத்தன்மை கட்டமைக்கப்பட்டுள்ளது. மக்களால் தெரிவு செய்யப்பட்ட நாடாளுமன்றத்தின் ஊடாக மாத்திரமே ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தமுடியும். நாடாளுமன்றத் தேர்தலின்றி ஆட்சி மாற்றம் என்பது சாத்தியப்படாது. நாடாளுமன்றத்தின் மறு இடமாக வீதியை குறிப்பிட இயலாது. நாடாளுமன்றம் இல்லாத நாடுகள் அழிவுகளையே சந்திக்கும். அதேபோன்றுதான் பொருளாதாரச் சீரழிவுகளைக் கொண்ட நாடுகளும் பேரழிவுகளைச் சந்திக்கும் - என்றார். (அ-ம)

## உள்ளூராட்சித்...

திறைசேரியின் செயலாளர், அரச அச்சக அதிகாரி மற்றும் பொலிஸ்மா அதிபருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது என்று தேசிய தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

உள்ளூராட்சித் தேர்தலுக்கான நிதியை தடுத்துவைக்க முடியாது என்று திறைசேரியின் செயலாளருக்கு உயர் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது. இதனால், தேர்தலுக்கான அடுத்தகட்ட நடவடிக்கைகள் தொடர்பில் தீவிரமாகப் பரிசீலிக்கப்பட்டு வருகின்ற நிலையிலேயே, எதிர்வரும் 7 ஆம் திகதி இது தொடர்பில் ஆராய்வதற்காக தேர்தல்கள் ஆணைக்குழு கூடவுள்ளது.

அரச அச்சகத் திணைக்களம், நிதி அமைச்சு, பொலிஸ் திணைக்களம் உட்பட தேர்தலுடன் தொடர்புடைய ஏனைய தரப்பினருடன் கலந்துரையாடியதன் பின்னர், திகதி தீர்மானிக்கப்படும் என தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் நிமால் புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார். (அ-ம)

## கச்சதீவில் இம்முறை...

ஆரம்பமானது. வழக்கத்துக்கு மாறாக இம்முறை பிக்குகளின் நடமாட்டம் அதிகரித்திருந்தமையை அவதானிக்க முடிந்தது.

கச்சதீவு வருடாந்தப் பெருவிழா நேற்று மாலை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. இலங்கையில் இருந்தும் இந்தியாவில் இருந்தும் பல்லாயிரம் பக்தர்களின் பங்களிப்புடன் வெகு சிறப்பாக இந்தத் திருவிழா முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இம்முறை கச்சதீவில் பிக்குகளின் நடமாட்டம் அதிகரித்திருந்ததை அவதானிக்க முடிந்தது. பிக்குகளுக்காக பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தன. (அ-ம-125)

## அத்துமீறும்...

இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடும் இந்திய மீனவர்களின் படகுகள் உடனடியாகத் திருப்பியனுப்பப்படவேண்டும் என்று தமிழக மீனவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயத்தின் வருடாந்தத் திருவிழாத் திருப்பலி நேற்று இடம்பெற்றது. இதன் ஒரு பகுதியாக, இலங்கை - இந்திய மீனவர்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணும் விதமாக பேச்சுக்களும் முன்னெடுக்கப்பட்டன. இதன்போதே 'அத்துமீறிய மீன்பிடியில் ஈடுபடும் இந்திய மீனவர்கள் உடன் திருப்பி அனுப்பப்படவேண்டும்' என்று தமிழக மீனவர்களின் பிரதிநிதியாக பேச்சில் கலந்துகொண்ட தமிழக மீனவத் தலைவர் முனுசாமி வலியுறுத்தினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்படையால் மோசமாகத் தாக்கப்படும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. அண்மையில்கூட எமது கடற்றொழிலாளர்களில் ஆறு பேர் மீது இலங்கைக் கடற்படையினர் மிகமோசமான தாக்குதலை மேற்கொண்டுள்ளனர். இதையடுத்து அவர்கள் ஆறு பேரும் தீவிர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டு இப்போதுதான் உடல்நலம் பெற்றுள்ளனர். எமது மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் கனிவுடன் அணுகவேண்டும். தண்டனைகளை வழங்கும்போது மனிதாபிமான நடவடிக்கைகளைப் பின்பற்ற வேண்டும். அத்துமீறி மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டால் இந்திய மீனவர்கள் உடனடியாகத் திருப்பி அனுப்பப்படவேண்டும். அதுபோன்று நாமும் (இந்தியாவும்) இலங்கை மீனவர்களை உடனடியாகத் திருப்பி அனுப்புவோம் - என்றார். (அ-ம-125)

## கோத்தாபய...

நிராகரிக்கப்பட்டுள்ளது.

எதிரி தரப்பில் (சந்தேகநபர்) ஆஜராகிய ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராஜாவின் வாதத்தையடுத்து அரச தரப்பின் முக்கியமான சான்றாக முன்வைக்கப்பட்ட குற்றஒப்புதல் வாக்குமூலத்தை 14 வருட விசாரணையின் பின்னர் கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி நவரத்ன மாரசிங்க நேற்றையதினம் நிராகரித்தார்.

2006 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் முதலாம் திகதி கொழும்பு கொள்ளுபிட்டி பித்தலை சந்தியில், அப்போதைய பாதுகாப்புச் செயலரான கோத்தாபய ராஜபக்சவை கொலைசெய்யும் நோக்கோடு விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தற்கொலைத் தாக்குதலில் மூன்று இராணுவத்தினர் உயிரிழந்ததுடன், மேலும் சில இராணுவத்தினரும் பொதுமக்களும் காயமடைந்தனர். இதையடுத்து பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் ஐவருக்கு எதிராக கொழும்பு மேல் நீதிமன்றில் சட்டமா அதிபரினால் 2013ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் நான்காம் திகதி வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கில் இரண்டாம் எதிரியான பொறியியலாளர் சிவலிங்கம் ஆரூரனுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் சட்டமா அதிபர் சார்பில் ஆஜராகிய பிரதி சொலிசிட்டர் ஜெனரல் ஜனாதிபதி சட்டத்தரணி ரோகாந்த அபேசூரிய குற்றஒப்புதல்வாக்குமூலத்தின் உண்மை விளம்பல் விசாரணை நிறைவடைந்ததையடுத்து தனது சமர்ப்பணத்தில், பயங்கரவாதத் தடைப்பிரிவுப் பொலிஸார் இரண்டாம் எதிரியான சிவலிங்கம் ஆரூரனை தடுத்து வைத்து விசாரணை செய்த காலத்தில், கைதியை தாக்கவோ சித்திரவதை செய்யவில்லையெனத் தெரிவித்ததுடன், கோத்தாபய கொலை முயற்சி தாக்குதலின் எதிரி சதியில் ஈடுபட்டதையும் கொலை முயற்சிக்கு உதவி ஒத்தாசை வழங்கியதையும், சொந்த விருப்பத்தில் குற்ற ஒப்புதல் வாக்கு மூலமாக தமிழ் மொழியில் எழுதி உதவிப் பொலிஸ் அத்தியட்சகருக்கு வழங்கியுள்ளார். எனவே எதிரியால் வழங்கப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்கு மூலத்தை அரச தரப்பில் எதிரிக்கு எதிரான சான்றாக நெறிப்படுத்துவதற்கு நீதிமன்றம் கட்டளையிடவேண்டும் எனவும் தனது வாதத்தை முன்வைத்தார்.

அரச தரப்பு வாதத்தையடுத்து எதிரியின் சார்பில் ஆஜராகிய ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராஜா தனது வாதத்தில், பயங்கரவாதப் புலனாய்வு பிரிவுப் பொலிஸார் 2009ஆம் ஆண்டு பொறியியலாளரான சிவலிங்கம் ஆரூரனை கைது செய்து தனிமையில் தடுத்து வைத்து சித்திரவதைசெய்து குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தைப் பெற்றுள்ளனர். அரச சாட்சியான உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் சில்வாவின் சாட்சியத்தினை குறுக்கு விசாரணை செய்கையில் சாட்சியத்தில் பல முரண்பாடுகள் நீதிமன்றின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டதுடன் அரசியல்கைதியான சிவலிங்கம் ஆரூரனின் உடலில் காணப்பட்ட காயங்கள் பொலிஸாரின் கட்டுப்பாட்டில் தடுத்து வைக்கப்பட்டிருந்த காலத்தில் ஏற்படுத்தப்பட்ட காயங்கள் என சட்ட மருத்துவ அதிகாரியின் சாட்சியத்தினை குறுக்கு விசாரணை செய்கையில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. எனவே அரச தரப்பால் முக்கியமான சான்றாக முன்வைக்கப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை நிராகரிக்கும்படி கேட்டுக்கொண்டார்.

இரு தரப்பினதும் வாதப் பிரதி வாதங்களை செவிமடுத்த மேல் நீதிமன்ற நீதிபதி நவரத்ன மாரசிங்க குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை நிராகரிப்பதாக கட்டளை வழங்கினார். இதையடுத்து, எதிரி தரப்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராஜா இந்த அரசியல் கைதி 15 வருடங்களாக சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருப்பதை நீதிமன்றின் கவனத்துக்குக் கொண்டுவந்து அவருக்கு எதிராக மேலும் வழக்கை தொடர்ந்தும் நடத்த வேறு சுயாதீன சாட்சியங்கள் உள்ளனவா? இல்லையா? என்பதனை சட்டமா அதிபருக்கு நீதிமன்றுக்கு அறிவிக்க மிகக் குறுகிய கால தவணை கொடுக்கும்படி வேண்டிக் கொண்டதை அடுத்து வழக்கு அடுத்த மாதம் 3 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (அ-ம)

## இந்தியத்...

வரை. யாழ்ப்பாணத்துக்கான இந்தியத் துணைத்தூதுவர் காக்கவைக்கப்பட்டார். இதனால் கோபமடைந்த, துணைத்தூதுவர் ஆரம்ப நிகழ்வில் கலந்துகொள்ளாமல் அதைப் புறக்கணித்தார்.

யாழ். சர்வதேச வர்த்தக் கண்காட்சி நேற்றுக் காலை ஆரம்பமானது. அதன் ஆரம்ப நிகழ்வுகள் யாழ். நகரப் பகுதியில் உள்ள ரில்கோ விருந்தினர் விடுதியில் நடைபெற்றது. ரில்கோ விடுதியில் நடைபெற்ற நிகழ்வுக்கு வடக்கு ஆளுநருக்கு அழைப்பு விடுக்கப்பட்டபோதும் அவர் கலந்துகொள்ளவில்லை என்றும், அவர் சார்பாக ஆளுநரின் செயலாளரே கலந்துகொண்டார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

ரில்கோவில் இடம்பெற்ற நிகழ்வின் பின்னர் யாழ்ப்பாண இந்தியத் துணைத்தூதுவர் உட்பட விருந்தினர்கள் ஊர்வலமாக கண்காட்சி நடைபெறும் இடத்துக்கு அழைத்து வரப்பட்டனர். கண்காட்சியை நாடா வெட்டித் திறந்துவைக்கும் நிகழ்வில் அவர்களுடன் ஆளுநரும் கலந்து கொள்வார் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. ஆளுநர் குறிப்பிட்ட நேரத்துக்கு அங்கு வருகை தராததால், ஏனைய விருந்தினர்கள் நீண்டநேரம் காக்க வைக்கப்பட்டனர். எனினும் நீண்டநேரமாக ஆளுநர் வராததை அடுத்து சினமடைந்த இந்தியத் துணைத்தூதுவர் நாடா வெட்டிகண்காட்சியைத் திறந்துவைக்கும் நிகழ்வில் கலந்துகொள்ளாமல் புறப்பட்டுச் சென்றார். (அ-ம-26)

## ஜோர்ஜிவா...

துரையாடப்பட்டுள்ளது. தற்போது, இலங்கையின் கடன் மறுசீரமைப்பு மற்றும் நிதி வசதி தொடர்பில், அனைத்துத் தரப்பினரினாலும் சாதகமான மற்றும் நம்பிக்கையான பின்னணி உருவாக்கப்பட்டு வருகின்றது. அண்மையில் சீனப் பிரதமருடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர், சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் ஜனாதிபதியுடன் இந்தக் கலந்துரையாடலை நடத்தியுள்ளமை மிகச்சிறந்ததொரு முன்னேற்றமாகப் பார்க்கப்படுகின்றது. (அ-ம)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## திருமதி யூலியற் பெனடிக்ற்



கரம்பொன் கிழக்கை பிறப்பிடமாகவும், 27, சுவாட்ஸ் லேன், சுண்டுக்குளியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி யூலியற் ஜெயசீலி பெனடிக்ற் அவர்கள் கடந்த (02.03.2023) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கிறிஸ்சோஸ்ரொம் பொன்ராஜா- எலிசபெத் தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும், காலஞ்சென்றவர்களான சூசைப்பிள்ளை - இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், சிறில் பெனடிக்ற் (உரிமையாளர் - லைடன் ரெக்ஸ்ரைல்) அவர்களின் அன்பு மனைவியும், பீற்றர் ஜெயகுமார் (அவுஸ்திரேலியா), ஜெயந்தினி (லண்டன்), அன்ரனி ஜெயந்திரன் (லண்டன்), ரூபினி டேவிற் (கொழும்பு), வதனி (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற யோசப் அன்ரன், கிளினெற், பிலிப் ஜெயராஜ், அலிஸ்ரன் தேவராஜ் (ஜேர்மனி), இம்மானுவேல் அருள்ராஜ் (ஜேர்மனி), ஆன் திருநெற் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், பியுலா (அவுஸ்திரேலியா), பிலிப் கொன்ஸ்ரன்ரைன் (சுரேஸ் - லண்டன்), ஜெனி (லண்டன்), ஜீவன் (கொழும்பு), தனு ஜோசப் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற கிளரென்ஸ் ராஜேந்திரன், ஆன் கிறேஸ் தரளம், மேரி அசெம்ரா (ரதி), விஜி (ஜேர்மனி), எல்ஸி (ஜேர்மனி), பவுஸ்ரின் (லண்டன்), வைலா, சாளற், கிளி, டோமினிக் ஆகியோரின் அன்பு மைத்துனியும், ஜோஸ்சுவா, ஜொகானா, கிறேஸ், கிடியான், பெஞ்ஜமின், ஹனா, வில்லியம், மரியா, ரவீன், ரீனா, கவின், கிறிஸ்ரீன், மரியன், டானியேல் ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 05.03.2023 ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, 06.03.2023 திங்கட்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் 27, சுவாட்ஸ் லேனிலுள்ள அவரின் இல்லத்திலிருந்து புனித யுவானியார் ஆலயம், சுண்டுக்குளிக்கு எடுத்துச்செல்லப்பட்டு, திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தோற்றம்**
**16.03.1945**

**மறைவு**
**02.03.2023**

**27, சுவாட்ஸ் லேன்,**
**சுண்டுக்குளி,**
**யாழ்ப்பாணம்.**
**021 222 6310**

**தகவல்:**
**பீற்றர் ஜெயக்குமார்**
**0061 412 215 286/ 077 148 4540**
**அன்ரனி ஜெயந்திரன்**
**0044 7956 44 9827 / 076 673 7262**
**கிளமென்ரைன் கொன்ஸ்ரன்ரைன் ஜெயந்தினி**
**004479460 55157**
**ரூபினி டேவிட் - 077 531 3203,**
**வதனி ஜோசப் - 0061 413213442**



தற்போதைய மருந்துத் தட்டுப்பாட்டைக் கருத்திற்கொண்டு வட்டுக்கோட்டைப் பிரதேச மருத்துவமனைக்குத் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியால் முதலாம் கட்டமாக ஒரு தொகுதி அத்தியாவசிய மருந்துகள் கடந்த செவ்வாய்க்கிழமை வழங்கப்பட்டன.

மேற்படி மருத்துவமனைக்கு தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி சார்பில் குறித்த கட்சியின் ஊடகப் பேச்சாளர் க.சுகாஷ் மருத்துவமனையின் பொறுப்பு மருத்துவ அதிகாரி திருமதி. ரதினி காந்தநேசனிடம் மருந்துப் பொருள்களை நேரடியாகக் கையளித்தார்.

(ய-66)


**வேலையாள்கள் தேவை**

யாழ்.நகரிலுள்ள (மனோகரா திரையரங்கிற்கு அருகில்) போட்டோ கொப்பி கடைக்கு அனுபவமுள்ள / அனுபவமற்ற ஊழியர்கள் தேவை. யாழ்.நகரிற்கு அண்மையுள்ளோர் விரும்பத்தக்கது.

CS/49375 4-6

**076 832 3682**

**வேலையாட்கள் தேவை**

மில் வேலை செய்வதற்கு வேலையாட்கள் தேவை.

**07777 222 15**

**பெண் வேலையாள் தேவை**

சிறிய பலசரக்கு கடையை நிர்வகித்து நடத்துவதற்கு (வயது எல்லை 26 விரும்பத்தக்கது) பெண் வேலையாள் தேவை.

தொடர்பு: **078 578 5890**


மிருசுவில் - விடத்தற்பளை கமலாசனி வித்தியாலயத்தில் கடந்த வருடம் தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்கள் கௌரவிப்பு அதிபர் இ.நாகேந்திரன் தலைமையில் வித்தியாலய மண்டபத்தில் கடந்த புதன்கிழமை இடம்பெற்

(ய-9)




**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் புத்தூரில் 60 பரப்புக் காணி விற்பனைக்கு.

- பருத்தித்துறை வீதி, புத்தூர் சந்தியில் இருந்து 1 1/2 KM தூரம் குடியிருப்புக்கள் சூழ உள்ள காணி.
- புத்தூர்-சாவகச்சேரி செல்லும் பிரதான வீதியில் இருந்து 500 M தூரத்தில்.
- நன்னீர் ஊற்று நிலம்.
- விவசாயம் செய்யவும், வீடு கட்டவும் உகந்த காணி.
- ஒரு பரப்பின் விலை ஒரு இலட்சத்து ஐம்பது ஆயிரம் ரூபா மட்டும்.
- 02 பரப்பாக பிரித்துக்கொடுக்கப்படும்.

**தொடர்பு: 076 46 50 171, 076 911 9371**

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் புத்தூரில் 15 பரப்புக் காணி விற்பனைக்கு.

- பருத்தித்துறை வீதியிலிருந்து 1 KM தூரத்தில்.
- புத்தூர் சோமாஸ்கந்தா வித்தியாலயத்திலிருந்து 1 KM தூரம்.
- புத்தூர் - சாவகச்சேரி செல்லும் பிரதான வீதியில் காப்பெற் வீதியிலிருந்து இரண்டாவது காணி.
- அரச, தனியார் பேருந்துகள் செல்லும் வீதி.
- நன்னீர் ஊற்று நிலம்.
- ஒரு பரப்பின் விலை இரண்டு இலட்சம் ரூபாய் மட்டும்.
- 2 பரப்பாக பிரித்துக்கொடுக்கப்படும்.

CS 23785 1-6

**தொடர்பு: 076 4350 614, 077 6385 683**

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் நாவற்குழியில் 8 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்.
- A-32 மன்னார் செல்லும் பிரதான காப்பெற்வீதி முகப்பாக.
- நாவற்குழி சந்தியிலிருந்து 100m தூரம்.
- கடைகள் அமைப்பதற்கும் வீடுகள் அமைப்பதற்கும் உகந்த நிலம்.
- நன்னீர் ஊற்று நிலம்.

**தொடர்பு**
**077 288 0152**
**076 436 5814**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 04.03.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.